# சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

அமர்வு வழக்கு எண் 56/2025

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 4 (LW- ) | நாள் | 19.09.2025. |
| பெயர் | கரிகாலசோழன் | தொழில் | வழக்கறிஞர் |
| தந்தை பெயர் | ராஜேந்திரன் | கிராமம் | |
| தாலுக்கா | | வயது | |

(குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் முட்டம் கிராமம் வடக்கு தெருவில் வசித்து வருகிறேன். வழக்கறிஞர் தொழில் செய்து வருகிறேன். இறந்து போன ஹரிசக்தி மற்றும் ஹரிஷ் ஆகியோரை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள்தான் இந்த கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மேற்கண்ட இருநபர்களின் கொலையில் சம்பந்தப்பட்டவர்கள். முட்டம் வடக்கு தெருவை சேர்ந்த ராதா மகன் ராஜ்குமார் என்பவர் அதே தெருவை சேர்ந்த முனுசாமி மகள் காயத்ரி என்பவரை இரண்டாண்டுகளுக்கு முன்பு காதலித்து அழைத்து போய் திருப்பூரில் திருமணம் செய்துகொண்டார். காயத்ரியை திருமணம் செய்து கொண்டதையும் அவரை அழைத்து சென்றதிலும் ராஜ்குமார் குடும்பத்திற்கும் முனுசாமிகுடும்பத்திற்கும் பிரச்சனை இருந்தது. அந்த பிரச்சனையால் ராஜ்குமாரின் அப்பா ராதா என்பவரின் கைவிரலை எதிரி தங்கதுரை வெட்டிவிட்டார். அவரின் வீட்டையும் கொளுத்திவிட்டார். அது சம்பந்தமாக பெரம்பூர் காவல் நிலையத்தில் ஒரு குற்ற வழக்கு பதிவாகியுள்ளது. இரு குடும்ப பிரச்சனையின்போது ஹரிஷ், தினேஷ், ஆதித்யன், அஜய் ஆகியோர் எதிரி

தடுக்க முயலும்போது எதிரி மூவேந்தன் தன் கையில் வைத்திருந்த கத்தியால் ஹரிஷை பார்த்து முதலில் உன்னை தான்டா கொல்லவேண்டுமென்று சொல்லி குச்சிக்காரி மகனே தேவுடியா மகனே இத்தோடு ஒழிந்துபோடா என்று சொல்லி ஹரிஷின் இடது பக்க வயிற்றில் கத்தியால் குத்தினார். அதன் விளைவாக ஹரிஷின் குடல் வெளியே வந்துவிட்டது. குடல் வெளியே வந்தவுடன் ஹரிஷ் கீழே சரிந்துவிட்டார். அதை பார்த்த அஜய் தடுக்க வரும்போது எதிரி ராஜ்குமார் தன் கையில் வைத்திருந்த கத்தியால் நீயும் சாவுடா என்று சொல்லி அஜயை குத்த வரும்போது அஜய் கத்தியை தன் கையால் பிடித்துவிட்டார். அப்போது அவருக்கு இடது பக்க கைக்கட்டைவிரலில் வெட்டுக்காயம் ஏற்பட்டது. நாங்கள் அருகில் சென்றபோது அவர்கள் மூவரும் எங்களை பார்த்து கிட்ட வந்தால் உங்களுக்கும் இந்த நிலைமைதான் என்று மிரட்டிவிட்டு ஓடிவிட்டார்கள். பின்பு நாங்களும் பொதுமக்களும் சென்று பார்த்து அவர்களை இருசக்கர வாகனத்தில் அழைத்து சென்றார்கள் நானும் பின்னால் சென்றேன். ஹரிசக்தி, ஹரிஷை பரிசோதித்த மயிலாடுதுறை மருத்துவமனை மருத்துவர்கள் அவர்கள் இருவரும் இறந்துவிட்டதாக சொன்னார்கள். பின்பு 18.02.2025 அன்று செம்பனார்கோவில் காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்க நான் நடந்ததை சொன்னேன்.

**1 முதல் 5 குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் உட்கார்ந்திருந்த மாணிக்கம் வீட்டு வாசலில் இருந்து அடிபம்பு உள்ள சம்பவம் நடந்த இடம் சுமார் 10 மீ தூரமிருக்கும். நாங்கள் நால்வர் அங்கு உட்காந்து பேசிக்கொண்டிருந்தோம். அவர்கள் நான்கு பேர் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். மஞ்சுளா வருவதற்கு முன்பு சுமார் 5 நிமிடம் வரை அங்கு உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். சாட்சிகள் வடக்கு தெருவை சேர்ந்தவர்கள் அவர்கள் வீடு உள்ள

வடக்குதெருவிற்கும் சம்பவ இடத்திற்கும் சுமார் 20 மீ தொலைவிருக்கும். மஞ்சுளா வந்தபிறகு சம்பவம் 2 அல்லது 3 நிமிடம் நடந்திருக்கும். நாங்கள் சம்பவ இடத்திற்கு செல்வதற்குள் சம்பவம் முடிந்துவிட்டதா என்றால் சாட்சி நாங்கள் நின்ற தூரத்திலிருந்து சம்பவத்தை பார்த்து கொண்டுதான் இருந்தோம் என்கிறார். அவர்கள் பேசியதை கேட்டோம் செய்ததையும் பார்த்தோம். சம்பவத்தின்போது மாணிக்கம் வீட்டு வாசலில் இருந்து தான் பார்த்துகொண்டிருந்தோம். நாங்கள் சம்பவ இடத்திற்கு செல்லும்போது எதிரிகள் ஓடிவிட்டார்கள் என்றால் நாங்கள் அலறல் சத்தம் கேட்டு கிட்டபோனபோது எதிரிகள் கையில் கத்தியோடு இருந்தார்கள். கத்தியை காட்டி எங்களை மிரட்டினார்கள். மிரட்டியபிறகு தான் அவர்கள் ஓடினார்கள். நான் சம்பவ இடத்திற்கு வரும்போது எதிரிகள் அங்கிருந்தார்கள். நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது மொத்தம் எத்தனை பேர் கூடியிருந்தார்கள் என்று பதட்டத்தில் என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியவில்லை. குத்துபட்டு விழுந்தபிறகு ஹரிஷை சுமார் ஐந்து நிமிடத்தில் மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டார்கள். ஹரிசக்திக்கு வண்டியில்லாததால் ஆட்டோவிற்காக வெயிட் பன்னிக்கொண்டிருந்தார்கள். அதற்கு பிறகு ஒரு 15 நிமிடம் கழித்து ஹரிசக்தியைமருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அந்த 15 நிமிடமும் நாங்கள் நான்கு பேரும் அங்கு தான் இருந்தோம். மருத்துவமனைக்கு அழைத்து செல்லும்போது எங்கள் தெருவில் உள்ள 25 பேரும் வந்துவிட்டார்கள். அந்த சமயத்தில் நான் சமாதானம் எதுவும் செய்யவில்லை. அவர்கள் ஆயுதங்களுடன் இருந்ததால் நாங்கள் சமாதானம் பேசினால் எங்களையும் தாக்கிவிடுவார்கள் என்று சமாதானம் செய்யவில்லை. சம்பவத்திற்கு சுமார் ஆறு மாத காலம் முன்பாகவே கொன்றுவிடும் நோக்கத்துடன் எதிரிகள் இருந்தார்கள். இந்த ஆறு மாத

R. H

காலத்தில் நான் சட்டப்படியான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. காயம் பட்ட நபர்களை நான், தீபா, துர்க்காதேவி, மணிகண்டன் ஆகியோர் மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை. இது சம்பந்தமாக காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தேனா என்றால் SI ஒருவருக்கு போன் செய்து சொன்னேன். 3ம் எதிரி ராஜ்குமார் 5, 6 எதிரிகளின் மகளை காதலித்து திருமணம் செய்தது சம்பவத்திற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பு என்றால் சரிதான். எதிரிகள் அனைவரும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். இந்த இரண்டு குடும்பங்களுடன் ஊரார் யாரும் பேசக்கூடாது என்று நானும் என் அண்ணன் கனிவண்ணனும் தான் என்று சொன்னால் அது சரியல்ல. ஸ்டேட்டஸ் போட்டது சம்பந்தமாக இரு தரப்பினரையும் ஒன்றாக அழைத்து பேசவில்லை தனித்தனியாக அழைத்து பேசினோம். இது சம்பந்தமாகவும் காவல் துறையில் எந்தபுகாரும் நான் கொடுக்கவில்லை. இறந்துபோன ஹரிசக்தி, ஹரிஷ், அஜய் ஆகியோர் பட்டாக்கத்தியால் தான் கேக்வெட்டி பிறந்தநாள் கொண்டாடுவார்கள் என்றால் சரியல்ல. சாதாரண கத்தியால் கேக்கை வெட்டி கொண்டாடுவார்கள். பள்ளிக்கல்லூரிக்கு செல்லும் பெண்களை ஹரிஷ், ஹரிசக்தி கேலி, கிண்டல் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. இதனால் எங்கள் தெருவை சேர்ந்தவர்கள் அவர்கள் மீது கோபத்தில் இருந்தார்கள் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தை சுற்றி மின்கம்பங்கள் இல்லை என்றால் சரியல்ல. சாட்சி மூன்று மின்கம்பம் உள்ளன என்கிறார். 1, 2, 3 எதிரிகளின் வீட்டை சாட்சிகள் அடித்து உடைத்தது சம்பந்தமாக வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் இல்லை. காதல் திருமணம் முடிந்தபிறகு ராஜ்குமார் வீட்டை மற்ற எதிரிகள் அடித்து சேதப்படுத்தினார்கள் என்று முதல் விசாரணையில் சொன்னவிவரங்களை ஆய்வாளர் என்னை விசாரித்தபோது சொல்லவில்லை. 1, 2, 3 மற்றும் 4, 5

எதிரிகள் அனைவரும் ஒரே சாதியினர் என்பதால் திருமணத்திற்கு பிறகு எந்தவிரோதமும் இல்லை என்றால் சரியல்ல. துர்காதேவி என்பவர் அவரும் காதல் திருமணம் செய்துகொண்டவர். துர்கா தேவி என்பவர் தாழ்த்தப்பட்ட வகுப்பில் வேறு பிரிவை சேர்ந்தவரை திருமணம் செய்து கொண்டார். இந்த திருமணத்தை எதிர்த்து எங்கள் கிராமத்தில் எந்த தடையும் விதிக்கவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்குள் எந்த பிரச்சனையும் இல்லை என்றாலும் நானும் என் சகோதரரும் கனிவண்ணனும் சாட்சிகளும் சேர்ந்து இந்த பிரச்சனையை பெரிதுபடுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. அதை பயன்படுத்தி எதிரிகளை பழிவாங்கவேண்டுமென்பதற்காக அவர்களுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தங்கதுரை, மூவேந்தன், முனுசாமி, ராஜ்குமார் ஆகியோர் வீட்டிற்கும் சம்பவ இடத்திற்கும் சுமார் 15 மீ தொலைவிருக்கும். சம்பவ இடத்திலிருந்த சுமார் 10 மீ தாண்டி சுமார் 25, 30 வீடுகள் இருக்கும். சம்பவம் இரவு நேரத்தில் நடந்ததால் சத்தம் கேட்டு அந்த பகுதியில் இருப்பவர்கள் வந்திருப்பார்கள் என்றால் சுமார் 25 பேர் வந்துவிட்டார்கள். மாணிக்கம் வீட்டிலிருந்து எங்கள் வீடு வடக்கே 10 மீ தூரத்திலிருக்கும். ஹரிஷ், ஹரிசக்தி ஆகியோர் காயம் பட்டதற்கும் எதிரிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் நானும் என் சகோதரரும் தான் காரணம் என்றால் சரியல்ல.

6 வது குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

19/9/15

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை